[2001 மே 28

(ஆ) வினாக்களுக்குத் துறைகள் விரைந்து பதில் அனுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. வினாக்கள் உறுப்பினர்களிடமிருந்து பேரவைச் செயலகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. அவை அனுமதிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தற்போது அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. வினாக்களுக்கு விடைகள் வரும் வரை சில நாட்களுக்கு பேரவையில் வினாக்கள்- விடைகள் நேரம் இருக்காது. சட்டமன்றப் பேரவை விதி 45-ன்படி வினாக்களுக்கான விடைகள் 42 நாட்களுக்குள் அளிக்க வேண்டும். அப்படி முடியாவிட்டால் மேலும் இரண்டு வார கால அவகாசத்தில் விடைகள் கொடுக்க வேண்டும். இனிமேல் வினாக்களுக்கான விடைகளை 42 நாட்களுக்குள் செயலகத் துறைச் செயலாளர்கள் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

4. தகவல் கோரல்

உறுப்பினரின் முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் முன்மொழிதல். திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. ப. ரங்கநாதன்: நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஆய்வில் உள்ளது. அறையில் வந்து விவாதித்து உரிய ஏற்பாட்டைச் செய்துகொள்ளலாம். சில ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு என்ன பதில் என்று நான் அனுப்பியிருக்கிறேன். மற்றவற்றை அறையிலே வந்து நீங்கள் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. ப. ரங்கநாதன்: பேரவையிலிருந்து எழுப்புவதற்கு அனுமதி தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறைக்கு வாருங்கள். என்னவென்று பேசி முடிவு செய்து கொள்ளலாம்.

2001 மே 28]

திரு. ப. ரங்கநாதன்: சேலம், நாமக்கல், சூரமங்கலம் போன்ற பகுதிகளில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இதற்கு அனுமதி அளித்த பிறகு இதை விவாதிக்க வேண்டும். இது ஆய்வில் உள்ளது. அறைக்கு வாருங்கள். விவாதித்துக்கொள்ளலாம்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் முன்மொழிதல். திரு. பி.ஆர். சுந்தரம்.*

திரு. பி.ஆர். சுந்தரம்: *ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:*

"2001 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" எனும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வழிமொழிதல், திரு. பி.எம். நரசிம்மன்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடங்குதல். திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் இனம், மதம், சாதி ஆகிய அனைத்திற்கும் அப்பாற்பட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிக் கட்டிலே அமர்த்திட , புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சியை மீண்டும்

@ பக்கங்கள் 191 முதல் 216 வரை இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.